| வினாத் தொகுப்பு எண் : |
|---|
| |

# EO2HR/2022

பதிவு எண் | | | | | | | | | | |

**2022**

## தாள் – II

# இந்து சமயம் மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம், 1959

## (பட்டப்படிப்புத் தரம்)

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

**கீழ்க்கண்ட அறிவுரைகளை வினாக்களுக்கு பதிலளிப்பதற்கு முன் கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக உங்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
5. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
6. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் அளிக்கப்பட்டிருப்பின் அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
8. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
9. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.**
10. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

SEAL

[Turn over

SPACE FOR ROUGH WORK

1. சுயநலத்தின் அடையாளங்களாக பகவத் கீதை கூறுவது எவை?

(A) சோகம், சுயவருத்தம்
(B) சோகம், சந்தேகம்
(C) தனிமை, சந்தேகம்
(D) பற்றுதல், சோகம்
(E) விடை தெரியவில்லை

2. பிரவிரித்தி என்பது

(A) சுயநலத்துடன் கூடிய செயற்பாடு
(B) சுயநலமற்ற செயற்பாடு
(C) சரியான செயற்பாடு
(D) நல்ல செயற்பாடு
(E) விடை தெரியவில்லை

3. கீதை கூறும் கர்மயோகத்துடன் சரியாக பொருந்தக்கூடிய வாக்கியத்தை தெரிவு செய்.

(A) செயல்பாடு என்பதை நாம் வழிமுறையாகக் கொள்ளாமல், அடையும் முடிவு அதில் இருப்பதாய் கருதல் வேண்டும்
(B) செயல்பாடு என்பது நல்ல முடிவை தரக்கூடிய வழிமுறை
(C) செயல்பாடு என்பது கருதுகோள் அல்ல மாறாக அது பணி
(D) உங்கள் கவனம் முழுவதும் அடையும் பலனிலேயே குறியாக இருக்க வேண்டும்
(E) விடை தெரியவில்லை

4. பழைய இந்திய துணைக் கண்டத்தில் பாசுபதம், பாகவதம் மற்றும் தந்திர சமய வளர்ச்சியைக் கொண்டு தாங்கள் புரிந்துக் கொள்வது என்ன?

(A) ஆரியமயமாக்கம்
(B) புத்த சமய வளர்ச்சியின் எழுச்சி
(C) மகா யுத்தங்கள்
(D) புராணங்களின் வளர்ச்சி
(E) விடை தெரியவில்லை

5. சைவ ஆகமங்களில் உள்ள சிவபேத ஆகமங்களின் எண்ணிக்கை

(A) பத்து
(B) பதினெட்டு
(C) பதினான்கு
(D) இருபது
(E) விடை தெரியவில்லை

6. இவர்களுள் எந்த சைவ சமயக் குரவரை சிவபெருமான் நீற்றறையில் இருந்தபோதும், கடலில் தள்ளப்பட்டபோதும் காப்பாற்றினார்.

(A) அப்பர்
(B) சம்பந்தர்
(C) சுந்தரர்
(D) மாணிக்கவாசகர்
(E) விடை தெரியவில்லை

7. சைவ சித்தாந்தத்தில் கூறப்பட்டுள்ள நான்கு மார்க்கங்களில், இறைவனுக்கு அருகாமையில் அடைதல்.

(A) சாயுச்சியம்
(B) சாரூபம்
(C) சாமீபம்
(D) சாலோகம்
(E) விடை தெரியவில்லை

8. சிவபெருமானின் பரத்துவம் சுட்டப்பெற்றுள்ள உபநிடதம்

(A) கட உபநிடதம்
(B) கேனோ உபநிடதம்
(C) மாண்டூக்ய உபநிடதம்
(D) ஐதரேய உபநிடதம்
(E) விடை தெரியவில்லை

9. இவர்களிருவர் சமகாலத்துக் குரவர் என கருதுவர்

(A) அப்பர் மற்றும் சம்பந்தர்
(B) சம்பந்தர் மற்றும் சுந்தரர்
(C) சுந்தரர் மற்றும் மாணிக்கவாசகர்
(D) சம்பந்தர் மற்றும் மாணிக்கவாசகர்
(E) விடை தெரியவில்லை

10. வைணவம் கூறும் முக்கியப் பொருட்கள் ஐந்து அதனை ———————— என்பர்.

(A) பாஞ்சராத்ரம்

(B) பஞ்ச சம்ஸ்காரம்

(C) அர்த்த பஞ்சகம்

(D) பஞ்ச பூதம்

(E) விடை தெரியவில்லை

11. பின்வரும் வைணவத்தின் அர்த்த பஞ்சகத்தை பொருத்துக.

(a) அடைபவன் — 1. உபாய சொரூபம்

(b) அடையப்படுவது — 2. ஸ்வஸ்வரூபம்

(c) பயன் — 3. புருஷார்த்த ஸ்வரூபம்

(d) உபாயம் — 4. பரஸ்வரூபம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 1 | 2 | 3 | 4 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 2 | 4 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

12. "பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்"
எனத் தொடங்கும் திவ்ய பிரபந்த பாடலை இயற்றியவர்

(A) தொண்டரடிப்பொடி ஆழ்வார்

(B) திருமங்கையாழ்வார்

(C) திருப்பாண் ஆழ்வார்

(D) குலசேகர ஆழ்வார்

(E) விடை தெரியவில்லை

13. கந்தன் என்ற முருகனுடைய பிறப்பையே பொருளாகக் கொண்டு காளிதாசர் இயற்றிய நூல்

(A) ரகுவம்சம்
(B) சாகுந்தலம்
(C) குமார சம்பவம்
(D) ஸ்கந்த புராணம்
(E) விடை தெரியவில்லை

14. அருணகிரிநாதர் பாடிய பாடல் தொகுப்பின் பெயர்

(A) திருவிசைப்பா
(B) தேவாரம்
(C) திருப்புகழ்
(D) திருவாசகம்
(E) விடை தெரியவில்லை

15. ஓம் எனும் பிரணவத்தின் வரி வடிவமே ———————— வடிவம் ஆகும்.

(A) முருகன்
(B) விநாயகர்
(C) சிவன்
(D) சக்தி
(E) விடை தெரியவில்லை

16. விநாயகரை 'ஐந்துகரத்தனை ஆனை முகத்தனை' எனக் கூறியவர்.

(A) திருமூலர்
(B) சிவபெருமான்
(C) பார்வதி
(D) தாயுமானவர்
(E) விடை தெரியவில்லை

17. எந்த நெறியில் சூரியனையே வழிபாட்டுக்குரிய பொருளாகக் கொள்கின்றனர்?

(A) சௌரநெறி
(B) சைவநெறி
(C) வைணவ நெறி
(D) சாக்க நெறி
(E) விடை தெரியவில்லை

18. பொருத்துக :

| | ஆழ்வார்கள் | | அம்சம் |
|---|---|---|---|
| (a) | பொய்கை ஆழ்வார் | 1. | நந்தகம் |
| (b) | பூதத்தாழ்வார் | 2. | சக்ரம் |
| (c) | பேயாழ்வார் | 3. | பாஞ்சசன்யம் |
| (d) | திருமழிசை ஆழ்வார் | 4. | கதை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 3 | 2 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 3 | 4 | 1 | 2 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

19. 'தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே' எனக் கூறியவர்.

(A) ஔவையார்

(B) திருமூலர்

(C) குலச்சிறையார்

(D) திருநீலகண்டயாழ்ப்பாணர்

(E) விடை தெரியவில்லை

20. மத்துவரின் துவைதம் என்பது ———— ஆகும்.

(A) ஒருமைக் கொள்கை

(B) இருமைக் கொள்கை

(C) மும்மைக் கொள்கை

(D) பண்மைக் கொள்கை

(E) விடை தெரியவில்லை

21. ஒரு பொருள் மாறாமல் இருக்கும் : ஆனால் அது மாறாத பொழுது மாறிவிட்டதாகத் தெரியும். இதற்கு ———— என்று பெயர்.

(A) வியர்த்த வாதம்

(B) பரிணாம வாதம்

(C) சூன்யவாதம்

(D) பிரம்ம பரிணாம வாதம்

(E) விடை தெரியவில்லை

22. துவைதம் என்பதன் நேர்பொருள்

(A) பன்மைக் கோட்பாடு

(B) விசேட ஒருமைக் கோட்பாடு

(C) ஒருமைக் கோட்பாடு

(D) இருமைக் கோட்பாடு

(E) விடை தெரியவில்லை

23. இரமணரை 'மகரிஷி' என்ற புனைப் பெயருடன் அழைத்தவர்.

(A) சுந்தரம் ஐயர்
(B) கணபதி சாஸ்திரி
(C) முத்துகிருஷ்ண பாகவதர்
(D) நாக சுந்தரம்
(E) விடை தெரியவில்லை

24. சங்கரரது விவேக சூடாமணி என்ற நூலை தமிழில் மொழி பெயர்த்தவர் யார்?

(A) அப்பர்
(B) இராமானுஜர்
(C) இரமணர்
(D) இராமகிருஷ்ணர்
(E) விடை தெரியவில்லை

25. தாயுமானவர் பாடல்கள் ———————— என அறிஞர்களால் பாராட்டப்படுகிறது.

(A) பஞ்சாக்கர தேசிகர் மாலை
(B) திவ்யபிரபந்தம்
(C) பெரியஞானக் கோவை
(D) தமிழ் மொழியின் உபநிடதம்
(E) விடை தெரியவில்லை

26. தமிழக சித்தராக கருதப்படுபவர்

(A) கபிலர்
(B) அகத்தியர்
(C) வால்மீகி
(D) வியாசர்
(E) விடை தெரியவில்லை

27. "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர்கணமே" – இது யாருடையக் கூற்று?

(A) தாயுமானவர்
(B) வள்ளலார்
(C) பாரதியார்
(D) திருமூலர்
(E) விடை தெரியவில்லை

28. எந்த காலக்கட்டத்தை வேத காலகட்டம் என்கிறோம்?

(A) கி.மு. 2000 – கி.மு. 400
(B) கி.மு. 1000 – கி.மு. 500
(C) கி.மு. 1500 – கி.மு. 600
(D) கி.மு. 2000 – கி.மு. 500
(E) விடை தெரியவில்லை

29. தரிசனம் எனும் சொல்லின் நேரடி பொருள் எதைக் குறிக்கிறது?

(A) பார்வை
(B) விசாரணை
(C) விளக்கம்
(D) காட்சிப்படுத்துதல்
(E) விடை தெரியவில்லை

30. கீழே கொடுக்கப்பட்டவற்றுள் யோக தத்துவத்தின் சரியான கூற்றுகளை கண்டறிக :

(i) வியக்கத்தக்கவற்றை ஒதுக்குதல் இயமம் எனப்படும்
(ii) விதிக்கப்பட்ட நல்லவற்றைச் செய்தல் நியமம்
(iii) பிரணயாமத்தில் பிராணவாயுவை உள்ளிழுத்தல் இரேசகம், உள்ளிருத்துதல், பூரகம் என்றும் வெளியிடுதல் கும்பகம் என்று குறிப்பிடப்படும்

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (ii)
(C) (ii) மற்றும் (iii)
(D) (i) மற்றும் (iii)
(E) விடை தெரியவில்லை

31. 'மீமாம்சம்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) குறிப்பிட்ட ஒரு பொருள் ஏனைய பொருட்களில் இருந்து சிறப்புத்தன்மையை ஆராய்தல்
(B) யாதானும் ஒரு சிக்கலுக்கு ஆழ்ந்த சிந்தனையாலும் பகுத்தறியும் ஆய்வினாலும் தீர்வு காண்பது
(C) யாதானும் ஒரு பொருளுக்கு விடை காண்பது
(D) வாதவித்தை அல்லது ஏதுவித்தை
(E) விடை தெரியவில்லை

32. பாதஞ்சலி சூத்திரம் எனப்படும் யோக சூத்திரத்தின் நான்கு பாதங்களை முறையாக வரிசைப்படுத்துக.

(A) சாதனபாதம், சமாதிபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம்

(B) சமாதிபாதம், சாதனபாதம், விபூதிபாதம், கைவல்யபாதம்

(C) விபூதிபாதம், கைவல்யபாதம், சமாதிபாதம், சாதனபாதம்

(D) கைவல்யபாதம், விபூதிபாதம், சமாதிபாதம், சாதனபாதம்

(E) விடை தெரியவில்லை

33. உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நூல்களின் எண்ணிக்கை

(A) 5

(B) 6

(C) 7

(D) 8

(E) விடை தெரியவில்லை

34. பின்வருவனவற்றில் தவறான இணையைக் கண்டறிக :

| | | | |
|---|---|---|---|
| 1. | சிவஞான போத மூன்றாம் சூத்திரம் | – | ஆன்மாவின் உண்மை |
| 2. | சிவஞான போத ஆறாம் சூத்திரம் | – | இறையின் சிறப்பு |
| 3. | சிவஞான போத ஒன்பதாம் சூத்திரம் | – | சிவப்பேறு |
| 4. | சிவஞான போத பன்னிரண்டாம் சூத்திரம் | – | அணைந்தோர் தன்மை |

(A) 1 மற்றும் 2 மட்டும்

(B) 2 மட்டும்

(C) 3 மட்டும்

(D) 3 மற்றும் 4 மட்டும்

(E) விடை தெரியவில்லை

35. சைவ சமய நெறிகளின் ஓவியமாக அமைந்தது

(A) தெட்சிணாமூர்த்தி வடிவம்

(B) இலிங்கோத்பவர் வடிவம்

(C) நடராச வடிவம்

(D) அகோரமூர்த்தி வடிவம்

(E) விடை தெரியவில்லை

36. சமண தத்துவத்தின்படி கீழே கொடுக்கப்பட்ட ஐந்து நோன்புகளில் சரியான வரிசையை கண்டறிக.

1. பிற உயிர்க்கு இன்னா செய்யாமை
2. கள்ளாமை
3. பொய்யாமை
4. மணமாகாத வாழ்க்கையை மேற்கொள்வது
5. உலகைத் துறத்தல்

(A) 1, 3, 2, 4, 5
(B) 1, 2, 3, 4, 5
(C) 5, 4, 3, 2, 1
(D) 2, 3, 1, 4, 5
(E) விடை தெரியவில்லை

37. இதிகாசங்களுள் ஒன்றான மகாபாரதத்தில் அடங்கியுள்ள நூல்

(A) பிரம்ம சூத்திரம்
(B) பகவத்கீதை
(C) உபநிடதம்
(D) ரகுவம்சம்
(E) விடை தெரியவில்லை

38. "சனாதனதர்மம்" என்பதன் பொருள்

(A) அழிவில்லா அறம்
(B) சமயாச்சாரங்கள்
(C) சடங்கியல்
(D) அரசியல் அறம்
(E) விடை தெரியவில்லை

39. உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம் என்று கூறியவர்

(A) திருமூலர்
(B) சிவவாக்கியர்
(C) அகத்தியர்
(D) தொல்காப்பியர்
(E) விடை தெரியவில்லை

40. நவக்கிரகங்களின் கீழே கொடுக்கப்பட்டனவற்றுள் சரியானவற்றை பொருத்தி கூறுக.

| | | | |
|---|---|---|---|
| 1. | சூரியன் | – | கிழக்குப் பார்வை |
| 2. | சந்திரன் | – | மேற்குப் பார்வை |
| 3. | குரு | – | தெற்குப் பார்வை |
| 4. | ராகு | – | வடக்குப் பார்வை |

(A) 1, 2 சரி

(B) 1, 3 சரி

(C) 3, 4 சரி

(D) 2, 4 சரி

(E) விடை தெரியவில்லை

41. முருகன் சூரனை அழித்து ஆட்கொண்ட திருத்தலம் எது?

(A) திருச்செந்தூர்

(B) திருப்பரங்குன்றம்

(C) திருத்தணி

(D) பழனி

(E) விடை தெரியவில்லை

42. இசைகள் படிப்படியாக மேல் உயர்ந்து செல்லும் இசைநிரலை ———————— எனவும், தாழ்ந்து செல்லும் இசைநிரலை ———————— எனவும் சேக்கிழார் கூறுகிறார்.

(A) அமரோசை மற்றும் ஆரோசை

(B) ஆரோசை மற்றும் அமரோசை

(C) ஸ்ருதி மற்றும் லயம்

(D) லயம் மற்றும் ஸ்ருதி

(E) விடை தெரியவில்லை

43. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | புனித நீர் சுத்தி | 1. | இரட்சாபந்தனம் |
| (b) | காப்புக் கட்டுதல் | 2. | மூர்த்தி பூஜை |
| (c) | குட வழிபாடு | 3. | புண்யாவாசனம் |
| (d) | வடிவ வழிபாடு | 4. | கும்ப பூஜை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 1 | 4 |
| (B) | 1 | 4 | 3 | 2 |
| (C) | 4 | 2 | 1 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

44. மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசியில் நடைபெறும் விரத விழா எது?

(A) வைகுண்ட ஏகாதசி விரத விழா
(B) கந்த விரத விழா
(C) சிவராத்திரி விரத விழா
(D) திருவாதிரைத் திருவிழா
(E) விடை தெரியவில்லை

45. கீழ்கண்டவற்றுள் பழனியை பற்றிய சரியான குறிப்பு எது?

1. திருமகள், காமதேனு, சூரியன், மண்மகள், நெருப்பு கடவுள் ஆகிய ஐவரும் வழிபட்டு இறைவனின் அருள் பெற்ற இடமாதலால் திருவாவினன்குடி எனப் பெயர் பெற்றது
2. பாலசுப்பிரமணியர் சூரனை அழித்து ஆட்கொண்டு மீண்டதும் சிவபெருமானை வழிபடும் கோலத்தில் வீற்றிருப்பதும்
3. சிறப்பும் அழகும் ஒரு சேரப் பொருந்திய இடம்

(A) 1 மட்டும்
(B) 1, 2 மட்டும்
(C) 2, 3 மட்டும்
(D) 1, 3 மட்டும்
(E) விடை தெரியவில்லை

46. இந்து சமய அறநிலை கொடைச் சட்டம் 1959ன் படி இந்து சமய அறநிலைய சட்டங்களை சமண பொது சமய நிறுவனங்களுக்கு அரசு அறிவிக்கை வாயிலாக நீட்டிக்கும் போது அந்நிறுவனங்களுக்கு மறுப்புரைகள் அளிக்க கொடுக்க வேண்டிய கால அளவு

(A) ஆறு மாதங்களுக்கு குறையாமல்

(B) எட்டு மாதங்களுக்கு குறையாமல்

(C) இரண்டு மாதங்களுக்கு குறையாமல்

(D) மூன்று மாதங்களுக்கு குறையாமல்

(E) விடை தெரியவில்லை

47. பொருத்துக.

| | சட்டம் | | ஆண்டு |
|---|---|---|---|
| (a) | நிலக்கொடைகள் மற்றும் வாரிசு இன்மையால் அரசு பொருட்கள் ஒழுங்குறுத்தும் சட்டம் | 1. | 1890 |
| (b) | சமய நிலக்கொடைகள் சட்டம் | 2. | 1920 |
| (c) | அற மற்றும் சமயக் கட்டளைகள் சட்டம் | 3. | 1817 |
| (d) | அறநிலைக் கொடைகள் சட்டம் | 4. | 1863 |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

48. ஸ்மிருதி என்பதன் பொருள் என்ன?

(A) நினைவிற் கொள்ளப்படுவது
(B) காதால் கேட்கப்படுவது
(C) அறிவால் உணரப்படுவது
(D) மனதால் உணரப்படுவது
(E) விடை தெரியவில்லை

49. இருக் வேதத்தில் வரும்

'இருக்' என்பதற்கு ——————.

(A) யாகம் என்பது பொருள்
(B) இன்னிசையால் பாடப்பெற்றது என்பது பொருள்
(C) துதித்தல் அல்லது வழிபடல் என்பது பொருள்
(D) மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகளை சொல்வது என்று பொருள்
(E) விடை தெரியவில்லை

50. இந்து சமயங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக கூறப்படும் மூன்று நூல்களை எந்த பெயரால் அழைக்கின்றனர்?

(A) உபநிடதங்கள்
(B) பிரம்ம சூத்திரம்
(C) பிரஸ்தானத் திரயம்
(D) வேதங்கள்
(E) விடை தெரியவில்லை

51. சிவ ஆகமம் தொடர்பான கீழ்க்காணும் வாக்கியங்களைக் கவனிக்க

I. ஆகமங்கள் இருபத்தெட்டு ஆகும்.

II. இறைவனது ஐந்து முகங்களிலிருந்து இருபத்தெட்டு ஆகமங்கள் தோன்றினவென்று காரணாகமத்தால் அறிகிறோம்

(A) I சரி ஆனால் II தவறு
(B) I தவறு ஆனால் II சரி
(C) I மற்றும் II இரண்டும் சரி
(D) I மற்றும் II இரண்டும் தவறு
(E) விடை தெரியவில்லை

52. சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும் :

இந்து சமய மற்றும் அறநிலைய துறை சட்ட "நீதிமன்றம்" என்பது

(i) மாநகர் உரிமையியல் நீதிமன்றம்

(ii) மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

(iii) மாவட்ட நீதிமன்றம்

(A) (i), (ii) மற்றும் (iii) சரியானது

(B) (i) மற்றும் (ii) சரியானது

(C) (i) மற்றும் (iii) சரியானது

(D) (ii) மற்றும் (iii) சரியானது

(E) விடை தெரியவில்லை

53. ஆலோசனை குழுவில் இடம் பெற்றுள்ள அலுவலரல்லாத உறுப்பினர்களின் கால வரம்பு என்ன?

(A) ஐந்து ஆண்டுகள்

(B) பத்து ஆண்டுகள்

(C) இரண்டு ஆண்டுகள்

(D) மூன்று ஆண்டுகள்

(E) விடை தெரியவில்லை

54. துணிபு : மாவட்ட குழுவினை அரசாங்கம் அமைக்கின்றது.

காரணம் : பொது நலன் கருதி, தகுந்த வாய்ப்பு வழங்கிய பின் மாவட்ட குழு உறுப்பினர்களை அரசு நீக்கம் செய்யலாம்.

(A) துணிபு சரியானது, ஆனால் காரணம் தவறு

(B) துணிபு மற்றும் காரணம் இரண்டும் சரி, காரணம் துணிபிற்கான சரியான விளக்கமாகும்

(C) துணிபு தவறானது, காரணம் சரி

(D) துணிபு மற்றும் காரணம் இரண்டும் சரி, ஆனால் காரணம் துணிபிற்கான சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

55. பின்வருபவர்களுள் உதவி ஆணையருடைய வட்டார ஆள்வரையினை தீர்மானிப்பது யார்?

(A) மாநில சட்டமன்றம்

(B) மாநில அரசின் ஒப்புதலுடன் மாவட்ட ஆட்சியர்

(C) மாநில அரசின் ஒப்புதலுடன் ஆணையர்

(D) மாநில அரசின் ஒப்புதலுடன் உயர்நீதிமன்றம்

(E) விடை தெரியவில்லை

56. ஆணையரின் நிருவாக ஆளுகைக்கு உட்பட்டு —————— அல்லது நேர்வுக்கேற்ப —————— அரசால் அவ்வப்போது தீர்மானிக்கப்படுகின்றனர்.

(A) கூடுதல் ஆணையர், உதவி ஆணையர்

(B) இணை ஆணையர், துணை ஆணையர்

(C) கூடுதல் ஆணையர், இணை ஆணையர்

(D) உதவி ஆணையர், துணை ஆணையர்

(E) விடை தெரியவில்லை

57. சரியான வரிசையை தேர்ந்தெடு

(A) ஆணையர், கூடுதல் ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர், உதவி ஆணையர்

(B) ஆணையர், கூடுதல் ஆணையர், இணை ஆணையர், துணை ஆணையர், உதவி ஆணையர்

(C) ஆணையர், கூடுதல் ஆணையர், இணை ஆணையர், உதவி ஆணையர், துணை ஆணையர்

(D) ஆணையர், இணை ஆணையர், கூடுதல் ஆணையர், உதவி ஆணையர், துணை ஆணையர்

(E) விடை தெரியவில்லை

58. ஆணையர் மற்றும் அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும் சுமத்தப்பட்ட கடமை எதனையும் ஆற்றும் பொருட்டு வழிபாட்டிடம் எதனின் வளாகத்திற்குள்ளும் நுழையும் அதிகாரம் பெற்றவராவார்.

(A) சரி

(B) தவறு

(C) சொல்லொன்னாதது

(D) மேற்கண்டவற்றுள் ஏதுமில்லை

(E) விடை தெரியவில்லை

59. 1959ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் பிரிவு 24(6)ன் கீழ் இந்து சமய அறநிலைய ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினால் பாதிப்பிற்குள்ளான நபர்கள் எவரும் அரசிற்கு மேல்முறையீடு செய்ய வழங்கப்படும் கால அவகாசம், அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து

(A) ஒரு மாதம் (30 நாட்கள்)

(B) இரண்டு மாதங்கள் (60 நாட்கள்)

(C) மூன்று மாதங்கள் (90 நாட்கள்)

(D) மேல்முறையீடு செய்ய இயலாது

(E) விடை தெரியவில்லை

60. ஆணையர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட அலுவலர் எவரும் —————— இல்லாத பட்சத்தில் ஆலய வளாகங்கள் அதன் பகுதி எதற்குள்ளும், அதிகாரத்திற்கு உட்பட்டு நுழைய அதிகாரமில்லை.

(A) ஆணாக

(B) விபூதி அல்லது நாமம்

(C) இந்துவ்ாக

(D) பண்பாட்டு உடைகள்

(E) விடை தெரியவில்லை

61. கீழ்கண்டவற்றுள் அறங்காவலரின் தகுதிகள் அல்லாததை தேர்ந்தெடு

(A) இந்து சமயத்தை வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவர்

(B) பரம்பரை அறங்காவலர் அல்லாதவராயில் இருபத்து ஐந்து வயதுக்கு மேற்பட்டவர்

(C) விடுவிப்புப் பெறாத நொடிப்பு நிலையராக இருப்பவர்

(D) சமய நிறுவனத்தின் சார்பாக ஊதியம் பெறும் சட்டத் தொழிலாற்றுநராக பணியமர்த்தப்பட்டவர்

(E) விடை தெரியவில்லை

62. இணை ஆணையர் நியமிக்கும் தர்மகர்த்தா குழுவிலுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) இரண்டு
(B) மூன்று
(C) நான்கு
(D) ஐந்து
(E) விடை தெரியவில்லை

63. பின்வருபவர்களுள் தர்மகர்தாவினை நியமிக்கும் அதிகாரம் இல்லாத நபர்

(A) துணை ஆணையர்
(B) இணை ஆணையர்
(C) உதவி ஆணையர்
(D) மாவட்ட ஆணையர்
(E) விடை தெரியவில்லை

64. தவறான இணையினை தேர்ந்தெடுக்கவும்?

| | சொத்து மதிப்பு | | தர்மகர்த்தா நியமனம் |
|---|---|---|---|
| (i) | ரூ. 10,000 கீழ் | – | உதவி ஆணையர் |
| (ii) | ரூ. 10,000 - 2,00,000 | – | இணை ஆணையர் |
| (iii) | ரூ. 2,00,000 - 10,00,000 | – | ஆணையர் |
| (iv) | ரூ. 10,00,000க்கு மேல் | – | அரசாங்கம் |

(A) (i) மட்டும்
(B) (ii) மட்டும்
(C) (iii) மட்டும்
(D) (iv) மட்டும்
(E) விடை தெரியவில்லை

65. பின்வரும் எந்த அதிகாரி நல்ல அல்லது போதுமான காரணங்களுக்காக நிருவாக அலுவலரை பணியிடை நீக்கம் (அ) பணி நீக்கம் (அ) விலக்கல் செய்யலாம்?

(A) துணை ஆணையர்
(B) உதவி ஆணையர்
(C) காவல் ஆணையர்
(D) ஆணையர்
(E) விடை தெரியவில்லை

66. 1959ம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டத்தின் கீழ் சமய நிறுவனங்களில் பதவி வகிப்பவர் அல்லது பணியாளர்கள் நியமனம் செய்வதில் அறங்காவலர் பிறப்பித்த உத்தரவினால் பாதிப்பிற்குள்ளான நபர் அதற்கு மேல்முறையீடு செய்யவேண்டிய காலவரையறை உத்தரவு கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து —————— நாட்கள்.

(A) 30 நாட்கள்
(B) 60 நாட்கள்
(C) 90 நாட்கள்
(D) 180 நாட்கள்
(E) விடை தெரியவில்லை

67. அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் எனும் விதிக்கு மாறாக உள்ள வழக்கு எது?

(A) சிரூர் மடம் வழக்கு
(B) எம்.சி. கார்த்திகேயன் எதிர் உதவி ஆணையர் இ.ச.வு.அ.கொ
(C) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வர் கோயில் எதிர் தமிழ்நாடு அரசு
(D) சேஷம்மாள் எதிர் தமிழ்நாடு அரசு
(E) விடை தெரியவில்லை

68. அறங்காவலரின் ஆணையினால் குறையுள்ளவர் அதனை எதிர்த்து யாருக்கு மேல் முறையீடு செய்யலாம்?

(A) ஆணையருக்கு
(B) இணை ஆணையருக்கு அல்லது துணை ஆணையருக்கு
(C) உதவி ஆணையருக்கு
(D) உயர்நீதிமன்றத்திற்கு
(E) விடை தெரியவில்லை

69. சமய நிறுவனங்களில் பதவி வகிப்பவர் மற்றும் பணியாளருக்கு எதற்காக தண்டனை வழங்கப்படுகிறது

(A) நம்பிக்கை மோசடி, திறனின்மை

(B) ஆணைகளுக்கு கீழ்ப்படியாமை

(C) கடமையை புறக்கணித்தல், தவறான நடத்தை அல்லது வேறு போதிய காரணத்திற்காக

(D) மேற்கூறிய அனைத்தும்

(E) விடை தெரியவில்லை

70. அறங்காவலரால் தண்டிக்கப்பட்ட பதவி வகிப்பவர் அல்லது பணியாளர் யாரிடம் மேல்முறையீடு செய்யலாம்?

(A) கோயில் நிர்வாகம்

(B) நிர்வாக அலுவலர்

(C) இணை ஆணையர்

(D) கூடுதல் ஆணையர்

(E) விடை தெரியவில்லை

71. சமய நிறுவனங்களுடன் தொடர்புடைய அல்லது சமய நிறுவனங்களில் இருந்து ஊதியம் அல்லது மேல் ஊதியம் (emoulment or perquisite) பெறும் பணியாளர் அல்லது பதவி வகிப்பவர்களை கட்டுப்படுத்தும் அதிகாரி

(A) அறநிலையங்களின் அறங்காவலர்

(B) உதவி ஆணையாளர்

(C) துணை ஆணையாளர்

(D) இணை ஆணையாளர்

(E) விடை தெரியவில்லை

72. பின்வருவனவற்றுள் சேராததை தேர்ந்தெடு

அறங்காவலர்களால் பணியாளர்களின் மீது விதிக்கப்படும் ஒழுங்கு நடவடிக்கைகள்

(A) அபராதம்

(B) இடமாற்றம்

(C) இடைநீக்கம்

(D) நீக்கம்

(E) விடை தெரியவில்லை

73. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தில் வரவு-செலவுத் திட்டங்கள், கணக்குகள் மற்றும் தணிக்கை பற்றி எந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது

(A) VIII

(B) IX

(C) X

(D) XI

(E) விடை தெரியவில்லை

74. சமய நிறுவனங்களின் ஆண்டு வரவு செலவு கணக்குகளை தணிக்கை செய்யும் தணிக்கையாளர்கள் ———— ன் படி பொதுப்பணியாளர்களாக கருதப்படுவர்

(A) இந்திய தண்டனைத் தொகுப்பு சட்டம் 20

(B) இந்திய தண்டனைத் தொகுப்பு சட்டம் 21

(C) இந்திய தண்டனைத் தொகுப்பு சட்டம் 22

(D) இந்திய தண்டனைத் தொகுப்பு சட்டம் 23

(E) விடை தெரியவில்லை

75. இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டம் பிரிவு 87 (3)ன் கீழ் இச் சட்டத்தின் பிரிவு 92ன் நோக்கங்களுக்காக கணக்கிடப்படுகின்றவாரு ஒட்டி முந்திய பசலி ஆண்டு (Immediately Preceding Fasli Year) ல் சமய நிறுவனங்களின் ஆண்டு வருமானம் <u>எவ்வளவு ரூபாய்க்கு குறையாமலிருக்கும்</u> போது ஒருங்கியல் தணிக்கை (Concurrent Audit) செய்யப்பட வேண்டும்

(A) 5 லட்சம்

(B) 10 லட்சம்

(C) 15 லட்சம்

(D) 50 லட்சம்

(E) விடை தெரியவில்லை

76. பின்வருவனவற்றை வரிசைப்படுத்தவும்

அறங்காவலர் அல்லது பிற ஆள் எவரும் முறைகேடாக, சட்ட முரணாக அல்லது முறையற்ற செலவு செய்திருக்கிறார் எனக் கருதும் போது ஒரு அதிகாரியானவர்

1. தண்டக்கட்டணம் ஏன் அவருக்கு எதிராக பிறப்பிக்கக் கூடாது என விளக்கம் கேட்கலாம்
2. அதனைப்பற்றி அறிவிப்பு கொடுக்க வேண்டும்
3. விளக்கம் அவரிடமிருந்து பெறவேண்டும்
4. ஆணையின் வாயிலாக உறுதிச்சான்றளிக்க வேண்டும்
5. குறிப்பிட்ட காலத்திற்குள் அவரே செலுத்துமாறு பணிக்க வேண்டும்

(A) 3, 1, 2, 5 மற்றும் 4
(B) 1, 3, 2, 4 மற்றும் 5
(C) 1, 3, 4, 5 மற்றும் 2
(D) 1, 2, 3, 4 மற்றும் 5
(E) விடை தெரியவில்லை

77. மடங்கள் மற்றும் மடங்களுடன் இணைக்கப்பட்ட குறித்த வகை நிலக்கொடைகள் குறித்த தணிக்கை அறிக்கை அனுப்பப்படவேண்டிய அதிகாரி

(A) ஆணையர்
(B) இணை ஆணையர்
(C) துணை ஆணையர்
(D) உதவி ஆணையர்
(E) விடை தெரியவில்லை

78. இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டம் 1959 ன் கீழ் சமய நிறுவனங்கள் ஒவ்வொன்றும் அவை பெறுகின்ற வருமானத்தில் இருந்து ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய <u>ஆண்டு பங்கு தொகை</u> (An annual contribution) பற்றி குறிப்பிடும் இச்சட்டத்தின் பிரிவு

(A) பிரிவு 90
(B) பிரிவு 91
(C) பிரிவு 92
(D) பிரிவு 93
(E) விடை தெரியவில்லை

79. இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம் 1959 ன் பிரிவு 96 குறிப்பிடுவது

(A) ஆண்டுப் பங்கு தொகை (Annual Contribution)

(B) ஆண்டுச் செலவு (Annual Expenditure)

(C) திருக்கோவில் நிதியம் (Devaswom Fund)

(D) சமய மற்றும் அறநிலைக்கொடைகள் நிருவாக நிதியம் (Endowment Administration Fund)

(E) விடை தெரியவில்லை

80. பின்வருவனவற்றில் எது சமய மற்றும் அறநிலைக்கொடைகள் நிர்வாக நிதியத்துடன் தொடர்புடையது?

(i) நிலக்கொடை சட்டம் 94 ஆம் பிரிவை சார்ந்தது

(ii) இணை ஆணையரின் பங்களிப்பு முக்கியமானதாகும்

(iii) 1951 ஆம் ஆண்டு சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் கீழ் செயல்படுவதாகும்

(A) (i) சரி

(B) (ii) மற்றும் (iii) சரி

(C) (iii) மட்டும் சரி

(D) (i) மற்றும் (iii) சரி

(E) விடை தெரியவில்லை

81. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டம் பிரிவு 101 ன் படி எந்த பிரிவுகளுக்கு முரணாக பிறர்க்குரிமை மாற்றம் செய்ய கோருகிற நபர், நல்லெண்ணத்தில் உரிமைகோருகிறவராகக் கருதப்படமாட்டார்?

(A) பிரிவு 34 மட்டும்

(B) பிரிவு 41 மட்டும்

(C) பிரிவு 34 அல்லது பிரிவு 41

(D) மேற்கூறிய எதுவும் இல்லை

(E) விடை தெரியவில்லை

82. 1959 ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறகொடைகள் சட்டம் பிரிவு 53 (6) ன் கீழ் பரம்பரை அறங்காவலரை நீக்கம் அல்லது இடைநீக்கம் செய்து அரசால் அல்லது ஆணையாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்க்கு எதிராக மேல்முறையீடு செய்ய கால அவகாசம்

(A) 30 நாட்கள்

(B) 60 நாட்கள்

(C) 90 நாட்கள்

(D) 120 நாட்கள்

(E) விடை தெரியவில்லை

83. 1959 ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் பிரிவு 53(2)ன் கீழ் அறங்காவலர் ஒருவரை நீக்கம் செய்ய தேவையான காரணங்கள்

(i) அவர் இந்து சமயத்தை துறக்கின்றபோது

(ii) இச்சட்டத்தின் பிரிவு 92 (1) ன் கீழ் வழங்க வேண்டிய ஆண்டு பங்களிப்பை வேண்டுமென்றே செலுத்த தவறும் போது

(iii) தொடர்சியாக இரண்டு அறங்காவலர் குழு கூட்டத்திற்க்கு வருகை தராமல் இருப்பது

(A) (i) மட்டும் சரி

(B) (i) மற்றும் (ii) மட்டும் சரி

(C) (i) மற்றும் (iii) மட்டும் சரி

(D) (i), (ii) மற்றும் (iii) சரி

(E) விடை தெரியவில்லை

84. பரம்பரை அறங்காவலர் ஒருவர் அவருக்குரிய தகுதியின்மைகளில் எதற்கும் உட்பட்டிருப்பாராயின் அவரை அப்பதவியிலிருந்து நீக்க அதிகாரம் பெற்றவர்

(A) இணை ஆணையர் அல்லது துணை ஆணையர்

(B) ஆணையர்

(C) கூடுதல் ஆணையர் அல்லது உதவி ஆணையர்

(D) உதவி ஆணையர் அல்லது துணை ஆணையர்

(E) விடை தெரியவில்லை

85. பதிவேடு பராமரிப்பதில் கீழ்காணும் அதிகாரிகளின் பணிகளை பொருத்துக

(a) ஆணையர் — 1. பரிந்துரைப்பது

(b) துணை ஆணையர் — 2. நுண்ணாய்வு

(c) அறங்காவலர் — 3. மாற்றுவதற்கான வலியுறுத்துவது

| | (a) | (b) | (c) |
|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 |
| (B) | 2 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 1 |
| (D) | 3 | 1 | 2 |

(E) விடை தெரியவில்லை

86. சரியான இணையைக் கண்டறிக

(1) தமிழ்நாடு இந்து சமய அறநிலைய திருக்கோயில்கள் நன்செய் நில பரப்பளவு – 2.04 இலட்சம் ஏக்கர்

(2) தமிழ்நாடு இந்து சமய திருக்கோயில்களின் புன்செய் நில பரப்பளவு – 2.18 இலட்சம் ஏக்கர்

(3) தமிழ்நாடு இந்து சமய திருக்கோயில்களின் மானாவாரி நில பரப்பளவு – 0.21 இலட்சம் ஏக்கர்

(4) தமிழ்நாடு இந்து சமய திருமடங்களின் மானாவாரி நில பரப்பளவு – 0.56 இலட்சம் ஏக்கர்

(A) 1 மற்றும் 2 சரியானது

(B) 2 மற்றும் 3 சரியானது

(C) 3 மற்றும் 4 சரியானது

(D) 4 மற்றும் 1 சரியானது

(E) விடை தெரியவில்லை

87. பின்வரும் கூற்றிற்கான காரணத்தை ஆராய்க

கூற்று (A) : இறையருள் பெற திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு உணவளிப்பதே அன்னதானத் திட்டம் ஆகும்.

காரணம் (R) : திருச்செந்தூர் திருக்கோயிலில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது

(A) (A) சரி ஆனால் (R) தவறு

(B) (A) மற்றும் (R) சரி. (R) என்பது (A) விற்கான விளக்கமாகும்

(C) (A) என்பது தவறு (R) என்பது சரி

(D) (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A) விற்கான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

88. கலைஞர் தல மரக்கன்றுகள் நடும் திட்டம் துவங்கப்பட்ட நாள்

(A) 1.3.1976

(B) 1.3.1986

(C) 12.7.2020

(D) 07.08.2021

(E) விடை தெரியவில்லை

89. பராமரிப்பு பதிவேடுகளில் குறிப்பிடபட வேண்டிய திட்டங்கள் எவை?

(i) நிர்வாக முறை திட்டம்

(ii) வரவு மற்றும் செலவு திட்டம்

(iii) தணிக்கை திட்ட வரைவு

(A) (i) மட்டும் சரி

(B) (ii) மட்டும் சரி

(C) (iii) மட்டும் சரி

(D) (i) மற்றும் (ii) சரி

(E) விடை தெரியவில்லை

90. 1959 ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் கீழ் ஒரு சமய நிறுவனத்திற்கு சொந்தமான மிகை நிதியங்களை பயன்படுத்துதல் (Utilisation of surplus funds) பற்றி குறிப்பிடும் சட்ட வகையம்

(A) பிரிவு 34
(B) பிரிவு 36
(C) பிரிவு 38
(D) பிரிவு 40
(E) விடை தெரியவில்லை

91. ஏழைகளுக்கு உணவளித்தல் மற்றும் உணவளித்தல் மையம் அமைக்க துணைபுரியும் இந்து சமய அறக்கொடைகள் பிரிவு

(A) 35 (அ)
(B) 35 (ஆ)
(C) 36 (அ)
(D) 36 (ஆ)
(E) விடை தெரியவில்லை

92. தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் இயங்கும் நாதஸ்வரம் மற்றும் தவில் இசைப் பயிற்சிப் பள்ளி அமைந்துள்ள இடம்

(A) பராசக்தி வித்யாலயா, குற்றாலம்
(B) அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில், மதுரை
(C) அருள்மிகு நாகநாதசுவாமி திருக்கோயில், திருநாகேஸ்வரம்
(D) தருமபுர ஆதினம், தருமபுரம், மயிலாடுதுறை
(E) விடை தெரியவில்லை

93. வாடகை நிர்ணய குழுவின் அமைப்பில் பின்வரும் நபர்களில் எவர் இல்லை?

(A) ஆணையாளர்
(B) தருமகர்தா
(C) மாவட்ட பதிவாளர்
(D) மாவட்ட நீதிபதி
(E) விடை தெரியவில்லை

94. நிர்வாக அலுவலரை அமர்த்துதலுக்கு அதிகாரம் கொண்டவர்

(A) ஆணையர்
(B) துணை ஆணையர்
(C) இணை ஆணையர்
(D) தமிழ்நாடு அரசு
(E) விடை தெரியவில்லை

95. 1959 ம் ஆண்டு இந்து சமய மற்றும் அறநிலைக்கொடைகள் சட்டத்தின் கீழ் பிரிவு 45 குறிப்பிடுவது

(A) செயல் அலுவரின் நியமனம் பற்றியது
(B) மாநில இந்துசமய அறநிலையத்துறையின் அதிகாரம் பற்றியது
(C) துணை ஆணையாளர் நியமனம் பற்றியது
(D) உதவி ஆணையாளரின் அதிகாரம் பற்றியது
(E) விடை தெரியவில்லை

96. கீழ்கண்டவற்றுள் சரியான விடையினை தேர்ந்தெடு

(i) இந்து சமய அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழ் அனைத்து அறநிலையங்களுக்கும் செயல் அலுவலர் நியமனம் செய்யப்படுகிறார்கள்

(ii) மடங்களுக்கும் அறநிலையத்துறை செயல் அலுவலரே பணிகளை மேற்கொள்வார்

(iii) மடத்துடன் இணைந்த இதர குறிப்பிட்ட அறநிலைக்கொடைகளுக்கு அறநிலையத்துறை துணை ஆணையாளர் அதன் பணிகளை செய்வார்

(A) (i) மட்டும் சரி
(B) (i) மற்றும் (ii) மட்டும் சரி
(C) (i) மற்றும் (iii) மட்டும் சரி
(D) (ii) மற்றும் (iii) மட்டும் சரி
(E) விடை தெரியவில்லை

97. பின்வருவனவற்றில் சரியான வாக்கியங்களைக் கண்டறிக

(i) அறங்காவலர் குழுவில் 2 அறங்காவலர்களுக்கு குறையாமலும் 5 அறங்காவலர்களுக்கு மிகாமலும் உறுப்பினர்கள் இடம் பெற வேண்டும்

(ii) பெண் உறுப்பினர் இடம் பெற வேண்டும்

(iii) ஆதி திராவிடர் (அ) பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த உறுப்பினர் இடம் பெற வேண்டும்

(iv) இக்குழுவின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்

(A) (i) மற்றும் (iv) மட்டும் சரியானது

(B) (ii) மற்றும் (iii) மட்டும் சரியானது

(C) (i), (ii) மற்றும் (iii) சரியானது

(D) (iv) மட்டும் சரியானது

(E) விடை தெரியவில்லை

98. 1959 இந்து சமய அறக்கொடைகள் சட்டம் - பிரிவு 56ன் படி கீழ்கண்ட எந்த தண்டனை விதிக்க இயலாது?

(A) தண்ட தொகை

(B) சிறை தண்டனை

(C) பணி இடை நீக்கம்

(D) பதவி நீக்கம்

(E) விடை தெரியவில்லை

99. வேதகடவுள்களின் முக்கியமான பணிகளாக குறிப்பிடப்படுவன எவை?

(A) தேசத்தை விரிவாக்குவது

(B) அமைதியை நிலைநாட்டுவது

(C) அண்டசராசரத்தின் ஒழுங்குமுறை மற்றும் அறநெறியைப் பாதுகாப்பது

(D) இயற்கையை பாதுகாப்பது

(E) விடை தெரியவில்லை

100. பகவத்கீதையை பொருத்தமான இதிகாசத்துடன் பொருத்துக.

(A) மஹாபாரதம்

(B) இராமாயணம்

(C) சாகுந்தலம்

(D) மிருத்யகடிகை

(E) விடை தெரியவில்லை

101. உபநிடத காலகட்ட சிந்தனையாளர்கள் வரிசையை மிகசரியாக தேர்ந்தெடு.

(A) காண்டில்யா, ஜாபாலா, உத்தாலகா, ஸ்வேதகேது

(B) தைத்திரியா, ஐத்ரேயா, கௌடபாதர், கௌசிகர்

(C) ஜாபாலா, கௌடபாதர், கௌசிகர், ஸ்வேதகேது

(D) பிரஜாபதி, இந்திரன், ஐத்ரேயா, கௌடபாதரர்

(E) விடை தெரியவில்லை

102. ஆன்மா தனது ஒட்டுமொத்த உணர்வு நிலையின் ஒருமைப்பாட்டை அனுபவிக்கும் நிலையின் பெயர் எது?

(A) துரியா

(B) சுசுப்தி

(C) விஞ்ஞான

(D) பிராணம்

(E) விடை தெரியவில்லை

103. புராணம் என்பதற்கு ———————— என்பது பொருள்.

(A) ஐதீகத்தை நிரூபனம் செய்யும் வரலாறு

(B) ஆகமங்கள்

(C) பழைய வரலாறுகள்

(D) தோத்திரம்

(E) விடை தெரியவில்லை

104. நாச்சியார் திருமொழி எனும் பிரபந்தத்தை பாடியவர்

(A) ஆண்டாள்

(B) நம்மாழ்வார்

(C) பேயாழ்வார்

(D) மதுரகவியாழ்வார்

(E) விடை தெரியவில்லை

105. 'வையம் தகளியா வார்கடலே நெய்யாக

வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய

சுடராழி யான்அடிக்கே சூட்டினேன் சொல்மாலை

இடர்ஆழி நீக்குகவே என்று'

என்று பாடியவர்

(A) பொய்கையாழ்வார்

(B) நம்மாழ்வார்

(C) பூதத்தாழ்வார்

(D) பேயாழ்வார்

(E) விடை தெரியவில்லை

106. "பிட்டுக்கு மண்சுமந்தார்" எனும் வரி யாரோடு தொடர்புடையது?

(A) திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(D) மாணிக்கவாசகர்

(E) விடை தெரியவில்லை

107. உந்தி களிறே உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம் - வந்த அருள்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்பம் உற்று.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வெண்பா பட்டியலிடும் நூல்கள் எவ்வகை சாத்திரங்களாகும்?

(A) வைணவம்
(B) பஞ்சராத்திரம்
(C) சைவசித்தாந்தம்
(D) சாக்தம்
(E) விடை தெரியவில்லை

108. சைவசித்தாந்த கோட்பாட்டின் பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் எந்த வாதத்தின் அடிப்படையில் சித்தாந்த உண்மையாகிறது?

(A) தோற்றகாரணவாதம்
(B) அசத்காரியவாதம்
(C) சத்காரியவாதம்
(D) படைப்புகாரியவாதம்
(E) விடை தெரியவில்லை

109. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சாலோக்கியம் | 1. | கடவுளின் அருகில் இருப்பது |
| (b) | சமீப்பியம் | 2. | கடவுளில் ஐக்கியமாவது |
| (c) | சாரூப்பியம் | 3. | கடவுள் இருக்கும் இடத்தில் இருப்பது |
| (d) | சாயுஜ்யம் | 4. | கடவுளின் வடிவத்தை அடைவது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 2 | 3 | 1 | 4 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

(E) விடை தெரியவில்லை

110. இராமானுஜர் கொள்கை படி

வீடுபேறு என்பது ...

(A) தன்னிலை உணர்ந்து பிரம்மனுடன் கலத்தல்

(B) சீவன் முக்தி நிலை

(C) தளைகளினின்றும் உயிர் விடுதலை பெறுதல்

(D) சூன்யத்தை உணர்தல்

(E) விடை தெரியவில்லை

111. கீழ்கண்டவற்றில் எது மாத்வ மடம் அல்ல?

(A) பல்மாரு மடம்

(B) ஆத்மாரு மடம்

(C) காணூரு மடம்

(D) திருக்குறுங்குடி மடம்

(E) விடை தெரியவில்லை

112. 'பாதி மாதுடைய பரமன்' என்பது சிவபெருமானின் எந்த வடிவமாகும்?

(A) பைரவர்

